# இந்திய துணைத் தூதரகம்

## யாழ்ப்பாணம்

### ஊடக அறிக்கை

### காந்தி ஈருருளிப் பேரணி – 2019

யாழ் இந்தியத் துணைத் தூதரகமானது இன்று (ஜுன் 3) **"உலக ஈருருளி நாளை"** முன்னிட்டு, மகாத்மா காந்தியின் தன்நிறைவு கொள்கையை நினைவூட்டும் வகையில் **"காந்தி ஈருருளி பேரணி"** ஒன்றினை சிறப்பாக நடாத்தியது. காலை 9.30 மணிக்கு அரியாலை காந்தி சனசமூக நிலையத்தில் உள்ள மகாத்மா காந்தியின் திருவுருவச் சிலைக்கு யாழ் இந்தியத் துணைத் தூதுவர் ச.பாலச்சந்திரன் அவர்கள் மலர்மாலை அணிவித்து அதனைத் தொடர்ந்து இப் பேரணியானது மாண்புமிகு வடமகாண அவைத்தலைவர் சீ.வீ.கே சிவஞானம் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு யாழ் மாநகரசபை முதல்வர் வணக்கத்திற்குரிய இமானுவேல் ஆர்னோல்ட் தலமையில் காந்தியக் கொள்கையைப் பின்பற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட தொண்டர்கள் அணிவகுக்க யாழ்ப்பாணம் கார்கில்ஸ் சதுக்கத்தில் உள்ள காந்தி திருவுருவச் சிலையை வந்தடைந்தது.

அதனைத் தொடர்ந்து இந்தியத் துணைத் தூதுவரால் கார்கில்ஸ் சதுக்கத்தில் உள்ள காந்தி திருவுருவச் சிலைக்கு அவராலும் ,அனைத்து இலங்கை காந்தி சேவா சங்கத்தின் தலைவர் பேராசிரியர் சிவகரன், சர்வோதயம் அமைப்பின் மாவட்ட இணைப்பாளர் ஸ்ரீயுகேந்திரா மற்றும் ஏனைய சிறப்பு விருந்தினர்களாலும் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் அனைத்து காந்தீய தொண்டர்களால் மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. அதன் பின்னர் தூதரக இசை பயிலும் மாணவர்களால் மகாத்மா காந்திக்கு பிடித்த பாடல்கள் இசைக்கப்பட்டன.

இந் நிகழ்வில் யாழ் மாநகரசபை முதல்வர் வணக்கத்திற்க்குரிய இமானுவேல் ஆனோல்ட், மாண்புமிகு வடமகாண அவைத்தலைவர் சீ.வீ.கே சிவஞானம், யாழ் இந்தியத் துணைத்தூதுவர், அனைத்து இலங்கை காந்தி சேவா சங்கத்தின் செயலாளர் சாந்தன் சத்தியகீர்த்தி ஆகியோர் காந்தியின் எளிமையான இயற்கை சார் வாழ்வையும், தன்நிறைவு கொள்கையையும் ஈருருளியின் முக்கியத்துவம் மற்றும் இப் பேரணியின் முழக்கமான "மாசற்ற சூழல் மருந்தற்ற வாழ்வு" பற்றியும் சிறப்புரையாற்றினர்.

நிகழ்வு தொடர்பான புகைப்படங்கள் மற்றும் காணொளிகள் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளன.

****

*யாழ்ப்பாணம்*
*யூன் 3, 2019*